# செயற்சாதனை அறிக்கை
# 2010

இலங்கை புகையிரதத் திணைக்களம்

## முன் நோக்கு.

பிரயாணிகளினதும், பண்டங்களினதும் போக்குவரத்துக்குப் பாதுகாப்பானதும் நம்பகரமானதும் குறித்த நோத்தில் செயற்படுவதுமான புகையிரதப் போக்கு வரத்துச் வேை ஒன்றை சிக்கனமாகவும் செயற்றிறனுடனும் வழங்குதல்.

## சேவைகள்

பிரயாணிகளதும், பொருட்களினதும் போக்கு வரத்துக்காக பாதுகாப்புள்ளதும் நம்பகரமானதுமான குறிப்பிட்ட நேரத்தில் சேவையில் ஈடுபடக்கூடிய புகையிரதக் கட்டமைப்பொன்றை வழங்குவோம்.

## உள்ளடக்கம்


01. குறிக்கோள்கள் ........ 1

02 பொது விபரணம் ........ 1

03 சுருக்கக் குறிப்பு ........ 2

3.1 உப திணைக்களங்கள் ........ 2

3.2 புகையிரத நிலையங்கள் ........ 2

3.3 பாதைக் கட்டமைப்புகள் ........ 3

04. சகலவித செயற் சாதனைகளின் விபரம் 2010 ........ 3

05 நிதி வளர்ச்சி - 2010 ........ 4

06 புகையிரத அணி (கட்டமைப்பு) ........ 5

07 இயக்க சக்தி வழங்கல் ........ 5

7.1 சாதாரண நாளாந்த இயக்க சக்தி வழங்கல் ........ 5

08 அடிப்படை வசதிகள் ........ 6

08.1 புகையிரத பாதை அபிவிருத்தி ........ 6

08.2 பாதையை பராமரிப்பு செய்வதற்காக உபயோகிக்கப்பட்ட பொருட்கள் ........ 6

08.3 பாலங்கள் ........ 6

09 சைகை முறைமை ........ 7

09.1 சைகை கோளாகு எண்ணிக்கைகள் ........ 8

09.2 புகையிரதக் குறுக்கு பாதைகள் ........ 8

10 புகையிரத இயக்கம் ........ 9

10.1 கால அட்டவணைப் பிரயாணம் ........ 9

10.2 புகையிரத கிலோமீட்டர் அளவு ........ 9

10.3 விஷேட புகையிரத கிலோமீட்டர் ........ 10

10.4 புகையிரத விபத்துகள் ........ 10

10.5 புகையிரத விபத்துகளால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் ........ 11

11 வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் ........ 12

11.1 பயணிகள் போக்குவரத்து ........ 12

11.2 பொருட்கள் போக்குவரத்து ........ 12

12. புகையிரத பாதுகாப்புப் படை வருடாந்த குறிக்கோள் ........ 13

13 பயிற்சியும் அபிவிருத்தியும் ........ 13

13.1 தேசிய பயிற்றுவிப்புக்கள் (ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவகம்) ........ 13

13.2 வெளிநாட்டுப் பயிற்சிகள் ........ 14

14 சர்வதேச புகையிரத தொடர்புகள் .................................................................................................... 14
15 தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள்................................ 14
16 புகையிரத சேவையின் முன்னேற்றத்திற்கு உள்ள தடைகளும் எல்லைகளும்..................... 16

## 01. குறிக்கோள்கள்

- புகையிரதப் பயணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்துக்குறிய பிரிவுகளின் பங்களிப்பை விருத்தி செய்தல்.
- புகையிரத இயக்கப்பாடுகளில் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- பிரயாணிகள் புகையிரத சேவைகளின் பயன்பாட்டை மேலதிகமாக விருத்தி செய்தல்
- முகாமைத்துவக் காரியத் திறமையை அபிவிருத்தி செய்தல்.
- புகையிரத வருமானத்தை அதிகரித்தல்
- மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்.

## 02 பொது விபரணம்

2010 வருடத்தில் போக்குவரத்து களத்தில் இலங்கை புகையிரத சேவை, பிரயாணிகள் மற்றும் பொருள் போக்குவரத்தை நிகழ்த்தி பயனுள்ள சேவையொன்றை வழங்குவதற்காக ஆகக்கூடிய பங்களிப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தது. அதற்காக பிரயாணிகள் மற்றும் ஏனைய தேவைகளுக்கு பொருந்துமாப்போல் திட்டங்கள் வகுத்துக்கொண்டு பல்வேறு செய்முறைகளில் புகையிரத சேவையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. புகையிரத திணைக்களத்தின் எல்லா உப திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளில் சேவை செய்யும் 15603 மட்டில் உள்ள ஊழியர் தொகை மூலம் இந்நடவடிக்கைளை வெற்றி கொள்ளச் செய்வதற்காக சுழற்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

2010ம் ஆண்டில் முழு வருமானம் ரூபா.4018 மில்லியனானதுடன் அது கடந்த ஆண்டில் சுமாராக சிறு அளவில் வீழ்ச்சியைக் காட்டியது. அப்பாதிப்பிற்கு முக்கிய காரணமானது காலி - மாத்தறை புகையிரத பாதை நவீனப்படுத்துவதற்காக சில மாதங்கள் மூடப்பட்டு இருந்தமையாகும்.

2010ம் ஆண்டில் புகையிரத சேவையை நடாத்திச் செல்வதற்காக ரூபா 7163.15 மில்லியன் புனர்நிர்மாணச் செலவுடன் ரூபா 11362.78 மில்லியன் பராமரிப்புச் செலவாக செலவிட நேரிட்டது. இது கடந்த ஆண்டில் முப்பது வீத உயர்வாகும். இச்செலவின் ஊடாக பாதை, பாலம், புகையிரத நிலைய பராமரிப்பு, புகையிரத அணியின் பராமரிப்பு, சைகை மற்றும் தொலைதொடர்புகள் கட்டமைப்புகள் போன்றவை இவற்றில் அடங்கிய பராமரிப்புக்குள்ளானவற்றில் முக்கியனவைகளாகும்.

2010ம் ஆண்டில் புகையிரத பயணிகள் தொகை 101.5 மில்லியன் ஆன அதேவேளை பிரயாணிகள் கி.மீற்றர் 4352.8 ஆனதுடன் பொருட்கள் மெற்றிக்தொன் 2.7 போக்குவரத்து செய்ததுடன் தொன் கி.மீற்றர் 162.8 ஆகவும் ஆனது.

இந்திய கடன் உதவி முறையின் கீழ் கொழும்பு மாத்தறை புகையிரதப் பாதைகளின் நவீனப்படுத்தும் நடவடிக்கையில் முதல் கட்டமான காலி, மாத்தறை புகையிரதப்பாதை அதிவேக புகையிரதப் பாதையாக அமைக்கும் நடவடிக்கை 2010ம் ஆண்டில் நிகழ்த்தப்பட்டது. இப்பாதையில் பிரயான நேரத்தினை 35 நிமிடங்களாக குறைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். அத்துடன் மாத்தறை - கதிர்காமம் புகையிரதப்பாதையில் முதற்கட்டமாக மாத்தறையிலிருந்து பெலியத்த வரையான நிர்மாணத்திற்காக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அதே நேரம் அதற்கான நிதியை வழங்கியது சீன அரசாகும்.

வடக்கு புகையிரதப்பாதையை நவீனப்படுத்துவதற்காக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வட பாதை மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரையும் ஓமந்தையிலிருந்து காங்கேசன்துறை வரையும் மீள் அமைக்கப்படுகிறது. தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தை வரை புகையிரதப் பாதையமைபினை புகையிரதத் திணைக்களத்தால் நிகழ்த்தப்பட்டதுடன் புகையிரத நிலைய நிர்மாணம் தனியார் பங்களிப்புடன் நிகழ்ந்தது.

சைகைக் கட்டமைப்புப் பராமரித்தல் நடவடிக்கைகள் 2010ம் ஆண்டில் சிறப்பாக செய்யப்பட்டதுடன் ஜாஎலயிலிருந்து சீதுவை வரைக்குமான புதிய சைகைக் கட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. கடந்த ஆண்டை அண்மித்த 2010 ம் வருடத்தில் சைகை இடையூருகளை 2193ல் இருந்து 2087 வரையாக குறைப்பதற்கு முடிந்துள்ளது.

இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவகம் ஊடாக நடாத்தப்பட்ட பாட நெறிக்காக மாணவர்கள் 89 பேரை சேர்த்துக்கொண்டதுடன் 2010ம் ஆண்டில் பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களின் தொகை 93 ஆகவும் இருந்தது.

புகையிரதப் பாதுகாப்புப் படை நடவடிக்கைகள் இடைவிடாது நிகழ்த்தப்பட்ட அதேவேளை தண்டப்பணமான ரூபா 1.5 மில்லியன் இலாபமாகப் பெறப்பட்டது. அத்துடன் புகையிரதக் காணிகள் மூலம் பெறப்பட்ட இலாபம் ரூபா 1.7 மில்லியனாகும். அதற்கு மேலதிகமாக அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றும் நடவடிக்கைகள் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டன.

## 03 சுருக்கக் குறிப்பு

### 3.1 உப திணைக்களங்கள்

புகையிரத பொதுமுகாமையாளர் காரியாலயம்
புகையிரத கணக்காளர் உப திணைக்களம்
புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் உப காரியாலயம்
பிரதம பொறியியலாளர் (இயக்க சக்தி) உப திணைக்களம்
பிரதம இயந்திர பொறியியலாளர் உப திணைக்களம்
பிரதம பொறியியலாளர் (பாதை /தொழிற்சாலை) உப திணைக்களம்
பிரதம பொறியியலாளர் (சைகையும் & தொலைத்தொடர்புகளும்) உப திணைக்களம்
வனிக உப திணைக்களம்
புகையிரத பாதுகாப்புப் படை

### பிரிவுகள்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்
பிரதம செலவு உத்தியோகத்தர் காரியாலயம்
திட்டமிடல் பிரிவு
கணிணி பிரிவு

### 3.2 புகையிரத நிலையங்கள்

| இலக்கம் | பாதை | புகையிரத நிலைய எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 01 | பிரதான பாதை | 78 |
| 02 | மாத்தளைப்பாதை | 12 |
| 03 | புத்தளம் பாதை | 45 |
| 04 | களனிவெளி பாதை | 24 |
| 05 | மட்டக்களப்புப் பாதை | 31 |
| 06 | வடக்குப் பாதை | 55 |
| 07 | திருகோணமலைப் பாதை | 07 |
| 08 | கரையோரப் பாதை | 69 |
| 09 | தலைமன்னார் பாதை | 11 |
| 10 | மிஹிந்தலைப் பாதை | 02 |
| 11 | எரிபொருள் போக்குவரத்துப் பாதை | 01 |
| | **மொத்த புகையிரத நிலையங்களின் எண்ணிக்கைகள்** | **335** |

### 3.3 பாதைக் கட்டமைப்புகள்

| இலக்கம் | பாதை | தூரம் (கி.மீ) |
|---|---|---|
| 01 | பிரதான பாதை | 290 |
| 02 | மாத்தளைப் பாதை | 34 |
| 03 | புத்தளம் பாதை | 120 |
| 04 | களனிவெளி பாதை | 59 |
| 05 | மட்டக்களப்புப் பாதை | 212 |
| 06 | வடக்குப் பாதை | 184 |
| 07 | திருகோணமலைப் பாதை | 70 |
| 08 | கரையோரப் பாதை | 161 |
| 09 | தலைமன்னார் பாதை | 106 |
| 10 | மிஹிந்தலைப் பாதை | 14 |
| | **மொத்தம்** | **1250** |

புகையிரத பாதையின் மொத்த நீளம் 1250 கிலோமீட்டர்கள் என்பதுடன் புகையிரத வெளி (Yard) மற்றும் வெளியகப் பாதை உட்பட்ட புகையிரத திணைக்கள இயக்க நடவடிக்கைகள் நடைபெறும் மொத்த துூர அளவுகள் 1572 கிலோமீட்டர்களாகும்.

## 04. சகலவித செயற் சாதனைகளின் விபரம் 2010

| இலக்கம் | பொது செயற் சாதனைகளின் விபரம் 2010 | செயற் சாதனைகள் |
|---|---|---|
| 01 | புகையிரதப் பாதையின் மொத்தத் துாரம் (கி.மீ) | 1,640 |
| 02 | புகையிரதக் கட்டமைப்பு (சேவைக்காக உள்ளவை)<br>2.1 எஞ்ஜின்<br>2.2 அதிவேகத் தொடர் ஊர்திகள்<br>2.3 ஊர்தி அறைகள் (புகையிரதப் பெட்டிகள்)<br>2.4 கெல் (சரக்கு ஊர்திப் பெட்டிகள்) | <br>89<br>42<br>525<br>722 |
| 03 | புகையிரத கட்டமைப்பு (சிறப்பான சேவையொன்றை நடத்திச் செல்வதற்காகத் தேவையான)<br>3.1 என்ஜின்கள்<br>3.2 அதிவேகத் தொடர் ஊர்திகள்<br>3.3 ஊர்தி அறைகள் (புகையிரதப் பெட்டிகள்)<br>3.4 கெல் (சரக்கு ஊர்திப் பெட்டிகள்) | <br><br>110<br>60<br>800<br>1,200 |
| 04 | புகையிரதப் பிரயாணம்<br>4.1 பிரயாணிகளின் எண்ணிக்கை (மி)<br>4.2 பொருட்கள் (மெ..டொ) | 101.5<br>2.7 |
| 05 | புகையிரதப் பிரயாணம் (கி.மீ.மில்லியன்)<br>5.1 பிரயாணிகள்<br>5.2 பொருட்கள்<br>5.3 புகையிரதங்கள் | <br>4,352.8<br>162.8<br>9.7 |
| 06 | மொத்த வருமானம் (ரூ.மி)<br>6.1 பிரயாணிகள்<br>6.2 பொருட்கள்<br>6.3 ஏனையவைகள் | 4,018<br>3,112.6<br>419.8<br>485.6 |

| | | |
|---|---|---|
| 07 | மொத்தச் செலவுகள் (ரூ.மி)<br>7.1 மறுசீரமைப்புச் செலவுகள்<br>7.1.1 சம்பள கொடுப்பனவுகள்<br>7.1.2 பராமரித்தல்<br>7.2 மூலதனச் செலவு | 18,850.7<br>7,810.75<br>5,144<br>2,047.4<br>11,362.78 |
| 08 | எரிபொருள் பாவனை (ஒட்டோ டீசல் (லீ.மி)<br>எரிபொருளுக்கான மொத்தச் செலவு (ரூ.மி) | 29.37<br>2,144 |
| 09 | 9.1 மொத்த ஊழியர் தொகை<br>9.1.1 நிரந்தரம்<br>9.1.2 தற்காலிகம் | 15,603 |

## 05 நிதி வளர்ச்சி – 2010

| இலக்கம் | செலவுத் தொகுதி | ஒதுக்கீடு (ரூ.மி) | நிதி வளர்ச்சி (ரூ.மி) | சதவீதம் |
|---|---|---|---|---|
| 01 | மறுசீரமைப்புச் செலவுகள் | 7.810.75 | 7.163.15 | 92 |
| 02 | மூலதனச் செலவு | 19.225.6 | 11.362.78 | 59 |
| 03 | மொத்தம் | 27.036.35 | 18.525.93 | 68 |

### உப திணைக்களில் நிதி வளர்ச்சி – 2010

| உப திணைக்களம் | ஒதுக்கிய நிதி (ரூ.மி) | | செலவுகள் (ரூ.மி) | | இலக்கினைப் பூர்த்தி செய்யும் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|
| | உத்தேச எதிர்பார்ப்பு | இருப்பு | உத்தேச எதிர்பார்ப்பு | இருப்பு | உத்தேச எதிர்பார்ப்பு | இருப்பு |
| புகையிரத பொது முகாமையாளர் காரியாலயம் (பு.மு பி.பு.க பு.க) | 418.02 | 13.86 | 379.97 | 10.25 | 90.90 | 73.95 |
| இலங்கை ஜேர்மன் தொழிநுட்பம் பயிற்சி நிறுவகம் | 13.73 | 2.75 | 14.04 | 2.35 | 102.26 | 85.45 |
| இயக்க சக்தி | 2,475.92 | | 1,482.11 | | 59.86 | |
| போக்குவரத்து | 1,682.59 | 2 | 1,840.64 | 1.9 | 109.39 | 95 |
| வர்த்தகம் | 26.79 | 0.5 | 21.85 | | 81.56 | 0 |
| பாதுகாப்புப் படை | 198.96 | 0.24 | 221.83 | 0.15 | 111.49 | 64.61 |
| சிறிய திருத்த வேலைகள் | 547.7 | 460.6 | 720.23 | 415.87 | 131.50 | 90.29 |
| பாரிய திருத்த வேலைகள் | 776.36 | 7736 | 788.46 | 5,166.06 | 101.56 | 66.78 |
| பாதையும் தொழில் நுட்பமும் | 1,489.83 | 10,616.75 | 1,506.36 | 5,580.91 | 101.11 | 52.57 |
| தொலைத் தொடர்புகள் | 180.85 | 392.9 | 187.66 | 185.29 | 103.77 | 47.16 |
| **மொத்தம்** | **7.810.75** | **19.225.6** | **7.163.15** | **1.136.78** | **91.71** | **59.10** |

## 06 புகையிரத அணி (கட்டமைப்பு)

இந்த வருடத்தில் புகையிரத சேவைக்காக தேவயைான எஞ்சின் தொகுதியாகிய டீசல் மின்னியல் எஞ்சின்களின் தொகை தினமொன்றிற்கு வழங்கப் படுகின்ற தொகை 52 க்கு அண்மித்ததாக இருந்தது. இந் நிலைமையை மேலும் முன்னேற்றுவதற்காக புகையிரத எஞ்சின்கள் திருத்தும்போது தொழில்னுட்பசாலையிலும் ஓட்டஇயந்திரமடுவத்திலும் தங்கும் நேரசுழற்சிகளை தொடர்ந்தும் குறைப்பதற்காக அவசர வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஓட்ட இயந்திர மடுவம் மேலும் அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தினூடாக தினசரி திருத்துதல் செய்யும் வேலைத்திட்டங்களில் பயன்களை விரித்திசெய்ய முடிந்துள்ளது. வருடம் முடிவுறும்போது நாளொன்றுக்கு வழங்கப்படுகின்ற டீசல் மின் எஞ்சின்களின் தொகையை 55 க்கு அண்மித்ததாகக் கொண்டுவர முடிந்துள்ளது.

## 07 இயக்க சக்தி வழங்கல்

புகையித இயக்க சக்தி வழங்கலை சிறப்பானதாக நடைமுறைப்படுத்துவதற்கு ரூ.371 மில்லியன் செலவில் கீழ் குறிப்பிடப்படும் காரியங்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் மேலதிக உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

ரூபா 44 மில்லியன் செலவில் மாளிகாவத்தை முற்றவெளி நவீனமயப்படுத்தப்பட்டு நீர் வழிந்தோடுவதற்கான வழிமுறைகளைச் செய்வதற்காக வடிகால் கட்டமைப்பு சீரமைக்கப்பட்டது.

தெமட்டகொடை ஓடும் மடுவத்தின் செயற்பாட்டு நடவடிக்கையினை மேலோங்கச் செய்வதற்காக குறித்த நடவடிக்கைகளை குறித்த நேரத்தில் செய்தல்.

கொழும்பு முற்றவெளியில் தொழில் நுட்பசாலையை நவீனமயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

### 7.1 சாதாரண நாளாந்த இயக்க சக்தி வழங்கல்

**டீசல் நீர்மின் என்ஜின்கள்**

| விபரம் | W1 | W2 | W3 | Y | S5 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைப்படுத்தப்படும் அளவு | 3 | 2 | 10 | 28 | 3 |
| சேவைக்குத் தேவையான அளவு | 1 | 0 | 8 | 20 | 2 |
| சேவைக்காகக் கிடைத்த அளவு | 1 | 0 | 7 | 20 | 1 |

**டீசல் மின் எஞ்ஜின்கள்**

| விபரம் | M2 | M4 | M5 | M5A | M5B | M5C | M6 | M7 | M8 | M8A | M9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நடைமுறைப் படுத்தப்படும் அளவு | 13 | 14 | 0 | 0 | 4 | 7 | 14 | 15 | 8 | 2 | 10 |
| சேவைக்குத் தேவையான அளவு | 10 | 10 | 0 | 0 | 3 | 4 | 11 | 11 | 6 | 1 | 4 |
| சேவைக்காகக் கிடைத்த அளவு | 9 | 9 | 0 | 0 | 2 | 5 | 10 | 9 | 5 | 2 | 3 |

**அதிவேகவலு ஊர்தித் தொகுதி**

| விபரம் | S3 | S6 | S7 | S8 | S9 | S10 |
|---|---|---|---|---|---|---|
| பராமரிப்பில் உள்ள அளவு | 0 | 4 | 5 | 20 | 15 | 15 |
| சேவைக்காகத் தேவையான அளவு | 0 | 2 | 2 | 15 | 10 | 14 |
| சேவைக்காக கிடைத்த அளவு | 0 | 1 | 1 | 16 | 10 | 14 |

இந்த வருடத்துக்குள் சேவையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சாதாரண நாளாந்த டீசல் எஞ்ஜின்களின் தொகை 60 ஆக இருந்ததுடன் அது 52 மட்டமாக குறைப்பதற்கு முடிந்தது. அதேபோல் அதிவேக தொடர் ஊர்தி 43 ம் சாதாரண சேவையை நிறைவேற்றுவதற்காக இந்த வருடத்துக்குள் தேவையாக இருப்பதுடன் அது 39 மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு முடியுமாக இருந்தது.

## 08 அடிப்படை வசதிகள்

### 08.1 புகையிரத பாதை அபிவிருத்தி

வருடாந்த புகையிரதப் பாதை புனருத்தாபன வேலைத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் புகையிரத பாதை குறைபாடுகள் காரணமாக வருட ஆரம்பத்தில் போடப்பட்டிருந்த வேக எல்லை 810 இலிருந்து வருடத்துக்குள் வேக எல்லை 460 ஆக (92.1 கி.மி) நீக்குவதற்கு முடிந்தது. எனினும் போதுமான ஒதுக்கீடு கடந்த காலங்களில் நிகழாததால் இச் சொத்துகளால் திடிர் வீழ்ச்சியை கடந்த தசாப்தங்களில் காணமுடிந்தது. அதன்படி தொடர்ந்து நடைபெறும் இந் நிலைமையினால் வேக எல்லையை தொடர்ந்தும் பேணவேண்டியதாயிற்று.

இந்த வருடத்திற்குள் 32919 அடி நீளமுடைய புதிய ரயில் தண்டவாளங்களும் 42603 கொங்கிறீட் ஸ்லீபர் கட்டைகளும் 156491 மர ஸ்லீபர் கட்டைகளும் சக்கைக்கல் 23338.33 கியூப் உம் புகையிரத பாதையைப் பலப்படுத்துவதற்காக உபயோகப்படுத்தப்பட்டது.

### 08.2 பாதையை பராமரிப்பு செய்வதற்காக உபயோகிக்கப்பட்ட பொருட்கள்

| விபரம் | அளவு |
|---|---|
| ரயில் தண்டவாள நீளம் | 32,919 |
| மர ஸ்லீபர் கட்டைகள் | 156,491 |
| கொங்கிறீட் ஸ்லீபர் கட்டைகள் | 42,603 |
| வானே ஸ்லீபர் கட்டைகள் | 10,665 |
| சக்கைக்கல் கியூப் | 23,338.33 |
| சேவைப் புகையிரதம் | 401 |

கரையோர புகையிரதப் பாதை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மாளிகாவத்தை அளுத்கம மற்றும் காலி ஆகிய இடங்களில் ஓடும் இயந்திர மடுவம் நிர்மாணிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

### 08.3 பாலங்கள்

- கரையோர பாதையில் கதளுவ பாலத்தின் நிர்மாணம் முடிவுறலும்.
- வடக்குப் பாதையின் ஓமந்தை நொச்சிமோட்டை பாலங்களின் நிர்மாணம் முடிவுறலும்.
- வடக்குப் பாதையில் ஓமந்தை பாலத்தின் நிர்மாணமும் முடிவுறலும்.
- புத்தள பாதையின் ஜாஎல – சீதுவை இரட்டைப் பாதையின் பாலம் நிர்மாணம் முடிவுறலும்.

### 08.4 கட்டடங்கள்

கீழ் குறிப்பிடப்படும் கட்டடங்களின் விருத்தி மேன்பாடும் புனர்நிர்மாண நடவடிக்கைகளும் நிறைவு பெற்றுள்ளன.

**பிரதான பாதை**

| | |
|---|---|
| ➢ ஓய்வு அறைகள் | 03 |
| ➢ களஞ்சிய அறை | 01 |
| ➢ ஊழியர் மாடி வீடுகள் | 43 |
| ➢ புதிய அலுவலகம் | 01 |
| ➢ சுற்றுலா விடுதி | 01 |
| ➢ ஆயுத அறை | 02 |

**கரையோரப் பாதை**

| | |
|---|---|
| ➢ பாதுகாவலர் ஓய்வு அறை | 01 |
| ➢ ஓய்வு அறை | 01 |
| ➢ புதிய தொழில் நுட்ப சாலைகள் | |
| ➢ றிலே கெபின் | 01 |
| ➢ ஊழியர் மாடி வீடுகள் | |
| ➢ களஞ்சிய அறைகள் | 02 |
| ➢ ஊழியர் வீடுகள் | |
| ➢ புதிய அலுவலகம் | 01 |

**களணி கங்கை**

- ➢ ஊழியர் வீடுகள்

**வடக்குப் பாதை**

| | |
|---|---|
| ➢ களஞ்சிய அறை | 01 |
| ➢ ஓய்வு அறைகள் | |
| ➢ எழுது வினைஞர் வீடுகள் | |

**திருகோணமலை பாதை**

| | |
|---|---|
| ➢ மின் உற்பத்தியாக்கி இயந்திர அறைகள் | 02 |
| ➢ களஞ்சிய அறை | 01 |

**மட்டக்களப்புப் பாதை**

| | |
|---|---|
| ➢ களஞ்சிய அறைகள் | 01 |
| ➢ புகையிரதம் தரிக்கும் இடம் | 01 |
| ➢ புகையிரத நிலைய அதிபர் வெளிக்கள விடுதி | 01 |
| ➢ புகையிரத சாரதி உதவியாளர் வெளிக்கள விடுதி | 01 |

## 09 சைகை முறைமை

2009 ம் வருடத்தில் வருடாந்த சைகை இடையூறளவு 2193 ஆக இருந்தாலும் 2010 ம் ஆண்டில் அதனை 2087 வரை குறைத்துக்கொள்ள முடிந்தது. அது 6 வீதமளவில் கீழ்நோக்கியுள்ளது 2009 ம் வருடத்திற்கு சமமாக 2010 ம் வருடத்துக்குள் தினசரி சாதாரண இடையூறு அளவு 6 இல் இருந்து 5 வரை குறைக்க முடிந்துள்ளது.

### 09.1 சைகை கோளாகு எண்ணிக்கைகள்

| விபரம் | 2009 | 2010 |
|---|---|---|
| மத்திய மாவட்டம் | 835 | 683 |
| கீள் மாவட்டம் | 631 | 702 |
| வடக்கு மாவட்டம் | 333 | 449 |
| மேற்கு மாவட்டம் | 494 | 485 |
| மொத்தம் | 2193 | 2087 |
| சாதாரண இடையூறுகள் (தினசரி) | 6 | 5 |

சைகை கட்டமைப்பு நடைமுறைப்படுத்தலின் கீழ் நடுத்தரத்திலான (CL) முற்றவெளி (Yard) 06 உம் இயந்திரவியல் (Mechanical) முற்றவெளி 06 உம் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் வருட கடைசியில் நடுத்தரத்திலான முற்றவெளி 02 ஐயும் இயந்திரவியல் முற்றவெளி 04 ஐயும் நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை முடிக்கப்பட்டது.

மருதானை/கோட்டை 4வது பாதையின் நடவடிக்கை 100 % முற்றுப்பெற்றுள்ளது. ஊருகொடவத்தை/களனி 3வது பாதை நிர்மாணத் திட்டநடவடிக்கைகளில் 15 % மட்டில் முடிக்கப்பட்டது.

மருதானை/வாத்துவை க்கு இடையில் புதிய கலர் சைகை கட்டமைப்பொன்று ஸ்தாபிக்கப்படும் திட்டத்திற்கு விலைமனு கோரலுக்கான அனுமதி கிடைத்துள்ளது.

வடக்கு களுத்துறையிலிருந்து தெற்கு களுத்துறை வரை இருவழிப்பாதை நிர்மாணிக்கும் நடவடிக்கை செய்யப்பட்டுவருகின்றது.

## 09.2 புகையிரதக் குறுக்கு பாதைகள்

2009.01.01 தினத்தின்போது குறுக்கு பாதைகள் 315 திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டு வருவதுடன் 2010 ம் வருடத்துக்குள் குறுக்குப் பாதைகள் 11ன் நிர்மாண நடவடிக்கைகள் முற்றுப் பெற்றுள்ளது. அதன்படி அபயகுணவர்த்தன மாவத்தை, சுதுகும்பொல, கல்கொடவத்தை, ஜாஎல நீதிமன்ற வீதி, வெலிகந்தை, பூ ஓய – வவுனியா, மாத்தளை ஸ்ரீமாவோ பண்டாறநாயக்க வித்தியாலயம் , லுணுவில, ஓட்டமாவடி மற்றும் அல் ஹசானியா ஆகிய இடங்களில் குறுக்கு பாதைகள் நிர்மாணம் முடிக்கப்பட்டுள்ளன. அஸ்கிரிய புகையிரத நிர்மாண நடவடிக்ககைகளில் 15 % முடிவுற்றுள்ளது.

## 10 புகையிரத இயக்கம்

### 10.1 கால அட்டவணைப் பிரயாணம்

| விபரம் | அனுமதித்த புகையிரதங் களின் எண்ணிக்கை | பயணித்த புகையிரதங் களின் எண்ணிக்கை | உரிய நேரத்தில் பயணித்த புகையிரத ங்களின் எண்ணிக்க | தாமதமாக பயணித்தல் | | | | இரத்தான புகையிரத எண்ணிக்க |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிமிடம் 06–10 | நிமிடம் 11–30 | நிமிடம் 31–60 | 60க்கு மேல் | |
| **1 பிரயாணி** | **120 194** | **110 780** | **38 960** | **16 271** | **32 891** | **13 364** | **9 294** | **9 414** |
| குறுகிய | 65 841 | 63 554 | 27 241 | 11 460 | 18960 | 4 425 | 1 468 | 2 287 |
| தூர மற்றும் நகர்சேர் | 15 748 | 15 524 | 2 321 | 1 583 | 4 380 | 3 617 | 3 625 | 222 |
| பிரதேச | 35 301 | 28 994 | 9 120 | 3 309 | 8 602 | 4 451 | 3 512 | 6 307 |
| **11 சரக்கு** | **6 288** | **4 697** | **580** | **82** | **412** | **646** | **2 977** | **1 591** |
| **மொத்தம்** | **126 482** | **115 477** | **39 540** | **16 353** | **33 303** | **14 010** | **12 271** | **11 005** |

இவ்வருடத்தில் பயணிப்பதற்காக திட்டமிடப்பட்ட பிரயாணிகள் புகையிரத அளவு 120194 ஆகிய அதேவேளை பிரயாணித்த அளவு 110780 ஆக இருந்தது. அது சதவீதத்தில் 93 ஆகும். சரக்கு வண்டி சம்பந்தமாக கணிக்கப்பட்ட பிரயாணத்திற்கான திட்டமிடப்பட்ட புகையிரத அளவுகள் 75 % ஆகும். பொதுவாக ஒதுக்கப்பட்டு அனுமதித்த புகையிரதங்களின் எண்ணிக்கையாகிய 126482 இல் 115477 ஆக பயணித்த மொத்த புகையிரதங்களின் அளவை சதவிகிதத்தால் கணித்தால் 91% ஆகும்.

உரிய நேரத்துக்கு பயணித்த பிரயாணிகள் புகையிரதம் 35 உம் சரக்கு வண்டி 14 உம் ஆனதுடன் அதன்படி சரக்கு மற்றும் பிரயாணிகள் இருவகையுமே. ஊரிய நேரத்துக்கு பயணித்த புகையிரத சதவிகிதம் 32 ஆக இருப்பதுடன் அது 2009 ம் வருடத்தில் 30 ஆக இருந்தது.

### 10.2 புகையிரத கிலோமீட்டர் அளவு

| விபரம் | அதிவேக தொடர் ஊர்தி பயணம் | அதிவேக தொடர் ஊர்தி இரத்துகள் | டீசல் புகை யிரதப் பயணம் | டீசல் புகையிரதப் பயண இரத்துகள் | புயணித்த தொகை | பயண இரத்துகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 பிரயாணி | **3 106 553** | **62 245** | **5 979 473** | **332 106** | **9 086 025** | **394 351** |
| குறுகிய | 3 021 363 | 50 219 | 712 060 | 18 521 | 3 733 423 | 68 740 |
| தூர/ நகர்சேர் கடுகதி | 1 158 | 0 | 3 548 700 | 52 235 | 3 549 850 | 52 235 |
| பிரதேச | | | | | | |
| 2 சரக்கு | 0 | 0 | 295 276 | 112 782 | 295 276 | 112 782 |
| 3 வெற்றுப் புகையிரதம் | 15 430 | 0 | 56 137 | 0 | 71 567 | 0 |
| 4 இலகு எஞ்சின்கள் | 0 | 0 | 54 668 | 0 | 54 668 | 0 |

### 10.3 விஷேட புகையிரத கிலோமீட்டர்

| விபரம் | பிரயாணிகள்/ சரக்குடனான டீசல் புகையிரதம் | பிரயாணிகள்/ சரக்குடனல்லாத டீசல் புகையிரதம் | பிரயாணிகள்/ சரக்குடனான நீராவி புகையிரதம் | பிரயாணிகள் / சரக்குடனல்லாத நீராவி புகையிரதம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| விஷேட பிரயாணிகள் புகையிரதம் | 43 844 | 665 | | | 44 509 |
| விஷேட சரக்கு புகையிரதம் | 56 956 | | | | 56 956 |
| சேவைப் புகையிரதம் | 13 816 | 1 153 | | | 14 969 |
| ஹிடாச்சி | 458 | 394 | | | 852 |
| றயல் | 1 141 | | | | 1 141 |
| வயிஸ்ட்றோய் | 339 | | 1 499 | 429 | 2 267 |
| பலஸ்ட் | 24 311 | | | | 24 311 |
| மோடார் றொலி | 19 803 | | | | 19 803 |
| சுண்ணாம்புக் கல் | 7 795 | 7 795 | | | 15 590 |
| றெக் மோட்டார் கார் | 864 | | | | 864 |
| பிறேக்டவுன் | 2 905 | | | | 2 905 |
| வேறு | 578 | | | | 578 |
| **மொத்தம்** | 172 810 | 10 007 | 1 499 | 429 | 184 745 |

### 10.4 புகையிரத விபத்துகள்

2010 ம் ஆண்டில் நிகழ்ந்த விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் கீழ் உள்ள அட்டவணையூடாக காட்டப்படுகின்றன.

| விபத்துக்கள் | 2010 | | | |
|---|---|---|---|---|
| | கொழும்பு | அனுராதபுரம் | நாவலப்பிட்டி | மொத்தம் |
| புகையிரதத் தடம்புரளல்- புகையிரத பாதை | 16 | 15 | 13 | 44 |
| முற்றவெளியில் | 27 | 21 | 21 | 129 |
| புகையிரத மோதல் | 2 | 1 | 2 | 5 |
| வேறு விபத்துக்கள் | 2 | 22 | 6 | 30 |
| குறுக்கு பாதைகளில் வாகன மோதல் | 60 | 10 | - | 7 |
| வாகனங்களினால் குறுக்குப் பாதைத் தடைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் | 231 | 26 | 14 | 271 |
| தீப்பிடித்தல் | - | - | - | - |
| பயங்கரவாத நடவடிக்கைகள் | - | - | - | - |
| புகையிரத மோதல் காரணமாக நிகழ்ந்த மாடுகளின் மரணம் | - | 11 | - | 11 |
| புகையிரத மோதல் காரணமாக நிகழ்ந்த யானைகளின் மரணம் | - | 12 | - | 12 |
| மண் சரிவு மற்றும் மண்ணரிப்பு | - | - | 9 | 9 |

புகையிரத குறுக்கு பாதைகளில் ஏற்படும் மோதல் உட்பட ஏனைய விபத்துகளின் தொகை 2010 ம் வருடத்தில் 581 மட்டிலாகும். குறுக்கு பாதைகளில் மோட்டார் வாகனங்களின் தொகை 2009 வருடத்திற்கு அண்மித்ததாக சிறு அளவில் மேலெழுந்ததுடன் வாகனங்களின் மூலம் குறுக்குப் பாதைகளுக்கான விபத்துக்கள் 181 இல் இருந்து 271 வரை அதிகரித்துள்ளது. யுத்தம் முடிவுற்றதன் காரணமாக இவ்வருடத்துக்குள்ளும் எதுவித பயங்கரவாதத் தாக்குதல்கள் அறிக்கையிடப்படவில்லை. புகையிரத மோதலினால் ஏற்பட்ட மாடுகளின் மரணத் தொகை 2009 ம் ஆண்டில் 25 ஆனாலும் அது 2010 ம் வருடம் 11 வரையில் குறைந்துள்ளது. யானைகள் புகையிரதங்களில் மோதுவதனால் ஏற்பட்ட மரணத் தொகை இவ்வருடத்தில் 12 ஆகும்.

### 11.5 புகையிரத விபத்துகளால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள்

| விபரம் | 2009 | | 2010 | |
|---|---|---|---|---|
| | காயமடைதல் | மரணங்கள் | காயமடைதல் | மரணங்கள் |
| தடம் புரளலால் புகையிரதப் பயணிகள் காயமடைதல் மற்றும் மரணமடைதல் | 10 | - | 03 | - |
| புகையிரத மோதலால் நிகழ்த புகையிரத பயணிகள் காயமடைதல் மற்றும் மரணமடைதல் | 02 | - | 64 | 11 |
| புகையிரதத்திலிருந்து விழுந்ததனால் புகையிரத பயணிகள் காயமடைதல் மற்றும் மரணமடைதல் | 21 | 01 | 08 | 01 |
| புகையிரதத்திற்கு கலலெறிதலால் காயமடைதல் மற்றும் மரணமடைதல் | 09 | - | 06 | - |
| புகையிரத குறுக்கு பாதைக் கடவைகளில் புகையிரத மோதலால் சாதாரண பொதுமக்களுக்கு ஏற்பட்ட விபத்துகள் | 83 | 20 | 05 | - |
| புகையிரதப் பாதைகளில் புகையிரத மோதல் காரணமாக நிகழ்த தற்கொலைகள் | 93 | 98 | 142 | 103 |

2009 ம் வருடத்துக்குள் தடம் புரளலால் பயணிகள் 10 பேருக்கு காயமேற்பட்டடிருந்ததுடன் 2010ம் வருடத்தில் 3 வரை குறைந்தது மரண அறிக்கை இல்லை. புகையிரத மோதலினால் பயணிகள் 64 பேருக்கு காயம் ஏற்பட்டதுடன் பிரயாணிகள் 11 பேர் மரணிக்க நேர்ந்தது. 2010 ம் வருடத்துக்குள் புகையிரதங்களிலிருந்து விழுந்ததால் ஒரு பிரயாணியின் மரணம் அறிக்கையிடப்பட்டது. அதேபோல் மோட்டார் வாகன குறுக்குப்பாதைகளில் புகையிரத மோதலினால் ஏற்பட்ட மரணங்கள் 2009 இல் 20 ஆக இருப்பதுடன் அது 2010 இல் மரணங்கள் அறிக்கையிடப்படவில்லை. இவ்விபத்துகளில் காயமடைந்த குழுவினரும் 83 இல் இருந்து 5 ஆகக் குறைந்துள்ளது. புகையிரத மோதுண்டு தற்கொலை செய்து கொள்ளல் 2009 ம் வருடத்தில் 98 ஆக இருந்ததுடன் அது 2010 ம் வருடத்தில் 103 ஆக அறிக்கையிடப்பட்டது.

## 11 வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல்

### 11.1 பயணிகள் போக்குவரத்து

| **விபரம்** | பயணிகளின் எண்ணிக்கை (மி) | பயணிகளின் வருமானம் |
|---|---|---|
| சாதாரண பயணச்சீட்டு பயணிகள் | 52.08 | 2,363.39 |
| பருவகாலப் பயணச்சீட்டு பயணிகள் | 49.37 | 749.28 |
| **மொத்தம்** | 101.45 | 3,112.67 |

2009 ம் வருடத்திற்குச் அண்மித்ததாக புகையிரத சேவையை நுகர்ந்த பிரயாணிகள் தொகை குறைந்துள்ளது அது 2009 ம் வருடம் மில்லியன் 102 ஆனபோது 2010 ம் வருடத்துக்குள் அது 101.45 வரை வீழ்ச்சியடைந்ததை காணமுடிந்தது. 2009 ம் வருடத்திற்கு சமமாக இதனை பாதித்த காரணமாக கொழும்பு – மாத்தறை புகையிரத பாதை அபிவிருத்தி செய்யும் காரணத்தினாலும் காலி- மாத்தறைக்கிடையில் பாதை 5 மாதங்கள் மட்டில் மூடப்பட்டதனாலும் பிரயாணிகளின் தொகையில் வீழ்ச்சியைக்காண முடிந்தது.

பிரயாணிகள் வருமானமும் 2009 ம் வருடம் மில்லியன் 3266 ஆக இருந்ததுடன் 2010 இல் அது மில்லியன் 2363.39 வரை வீழ்ச்சியடைந்தது. அது 27 சதவீதமட்டிலான வீழ்ச்சியாகும். அதற்கும் பிரதானமான பாதித்த காரணமாகக் காணமுடிந்தது காலி- மாத்தறை புகையிரதப் பாதை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைக்காக மூடப்பட்டிருந்தமையே.

### 11.2 பொருட்கள் போக்குவரத்து

2009 வருடம் 2010 ம் வருடத்துக்குள் பொருட்களின் வருமானம் தொன் மற்றும் தொன் கிலோமீட்டர் அளவு கீழே குறிப்பிடுவதைக் காணமுடிந்தது

| | 2009 | 2010 |
|---|---|---|
| பொருட்களின் வருமானம் (மில்லியன்) | 337.1 | 419.7 |
| பொருட்கள் தொன் (மில்லியன்) | 1.64 | 2.7 |
| தொன் கி.மி (மில்லியன்) | 118 | 162.79 |

மேற்படி தொகைக் குறிப்பின்படி பொருட்களின் வருமானம் 2009 க்கு சமமாக 2010 ம் வருடத்தில் 25 வீதம் மேலெழுந்துள்ளது. அதேபோல் 2009 க்கு சமமாகப் பெறப்பட்ட 2010 ம் வருடம் பொருட்கள் தொன் மற்றும் தொன் கி.மி அளவும் கூடியதைக் காணமுடிந்தது.

இந்த வருடத்துக்குள் பொருட்களின் வருமானம் மற்றும் தொன் கி.மி ஆகிய பகுதி அனைத்துமே மேலெழுந்துள்ளதை காட்டுவதற்கு பிரதானமான காரணமாகியது வடகிழக்கு மாகாண அபிவிருத்தி செய்கையில் விஷேடமாக கட்டிடப்பொருட்கள் போக்குவரத்திற்காக புகையிரதம் பயன்படுத்தப்படுகின்றமையே. மேலும் பொருட்கள் போக்குவரத்துக் கட்டண மீள் பரிசீலனைகளும் தாக்கம் செலுத்தியுள்ளன.

கீழ்வரும் அட்டவணையின் ஊடாக 2010 ம் ஆண்டிற்குள் பொருட்களின் டொன் அளவு அந்தந்த வருடத்தில் காட்டிய பங்களிப்பினை காட்டுகிறது

| **பிரிவு** | **டொன் தொகை** |
|---|---|
| விவசாய உற்பத்தி | 29,799 |
| பெற்றோலிய உற்பத்தி | 517,079 |
| சீமெந்து | 2,047,090 |
| உற்பத்தி | 82,066 |
| கட்டடப் பொருட்கள் | - |
| வேறு | 25,535 |
| **மொத்தம்** | **2.701.569** |

உள்நாட்டு யுத்தம் முடிவுற்றதுடன் வடமாகாணம் அபிவிருத்தி செய்தலின் கீழ் பாதுகாப்பு அமைச்சுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி 2010 ம் வருடமும் புகையிரத சேவை ஊடாக கொள்கலன் போக்குவரத்துச் செய்ததுடன் கொழும்பிலிருந்து வவுனியா வரை தற்காலிக வீடுகள் நிர்மாணிப்பதற்கான பொருட்கள் போக்குவரத்துச் செய்யப்பட்டன. அதேபோல் தனியார் பகுதி வியாபாரக் கம்பனி ஒன்றுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி உணவுப் பொருட்கள் போக்குவரத்து கொழும்பிலிருந்து வவுனியா வரை புகையிரதத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது.

## 12. புகையிரத பாதுகாப்புப் படை வருடாந்த குறிக்கோள்

2010 ம் வருடத்தில் புகையிரத சட்டக்கோலையின் கீழுள்ள குற்றம் சமபந்தமாக புகையிரத பாதுகாப்புப் படை மூலம் 2272 நபர்கள் கைதுசெய்யப்பட்டு இருப்பதுடன் அதிகூடிய கட்டணம் மற்றும் தண்டப்பணமாக ரூபா 1,496,460 அறவிடப்பட்டுள்ளது.

புகையிரத காணிகள் சம்பந்தமாக நியமிக்கப்பட்டிருக்கும் புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால் 2010 ம் வருடத்துக்குள் குத்தகை நிலுவைப்பணமாக அறவிடவேண்டியுள்ள ரூபா 2,061,053 பணம் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

பு.பா.ப மூலம் 2010 ம் வருடத்தினுள் தண்டனைக் கோவைச் சட்டத்தின் கீழ் புகையிரதத்தினுள் அனுமதியின்றி வியாபாரம் செய்தல் மற்றும் மிதமிஞ்சிய பொருட்களின் போக்குவரத்துச் செய்தல் சம்பந்தமாக கைது செய்து பெற்றுக்கொண்ட தண்டப்பணம் ரூபா 34,435 ஆகும்

பயணச் சீட்டு குற்றம் சம்பந்தமாக 2125 நபர்கள் 2010 ம் வருடத்துக்குள் கைது செய்யப்பட்டிருப்பதுடன் அறவிடப்பட்டிருக்கும் தண்டப்பணம் ரூபா 1,462,025 ஆகும்.

## 13 பயிற்சியும் அபிவிருத்தியும்

### 13.1 தேசிய பயிற்றுவிப்புக்கள் (ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவகம்)

2009 ம் வருடத்தற்குள் அந்த நிறுவனத்தின் மூலம் நடாத்தப்பட்ட கற்கை நெறிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

இயந்திர நிபுணர் கற்கை நெறி

டீசல் எஞ்சின் இயந்திர நிபுணர் கற்கை நெறி

மோட்டார் இயந்திர நிபுணர் கற்கை நெறி

காச்சிடித்து இணைக்கும் நிபுணர் கற்கை நெறி

மின்னியல் நிபுணர் கற்கை நெறி

அடிப்படை தொழில்நுட்ப கற்கை நெறி

தொழில்நுட்ப நிபுணர் கற்கை நெறி

மன அழுத்தம் மற்றும் அதற்கான காரணிகளை பரிசோதிக்கும் கற்கை நெறி

அடிப்படை மின் தொழில்நுட்ப கற்கை நெறி

இலங்கை ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவகத்தின் ஊடாக 2009 ம் 2010 ம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட முழுநேர பாடநெறிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| பாடநெறிகள் | பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை – 2009 | பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை – 2010 |
|---|---|---|
| மோட்டர் இயந்திர நிபுணர் | - | - |
| டீசல் எஞ்சின் இயந்திர நிபுணர் | 23 | 25 |
| மின்னியல் நிபுணர் | 25 | 25 |
| காச்சியடித்தல் நிபுணர் | 24 | 25 |
| இயந்திர நிபுணர் | 17 | 18 |

2010 ம் ஆண்டில் முழுநேர பாடநெறி பூர்த்திசெய்த மாணவர்கள் சம்பந்தமாக கீழ் அட்டவணையில் விபரிக்கப்படுபிறது.

| **பாடநெறிகள்** | **எண்ணிக்கை** |
|---|---|
| டீசல் எஞ்சின் இயந்திர நிபுணர் | 16 |
| மின்னியல் நிபுணர் | 15 |
| காச்சியடித்தல் நிபுணர் | 21 |
| இயந்திர நிபுணர் | 14 |

2010 ம் ஆண்டில் முழுநேர பாடநெறி பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை 66 ஆகும்

### 13.2 வெளிநாட்டுப் பயிற்சிகள்

இந்நிய கடனுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கரையோர புகையிரதப் பாதை அபிவிருத்தி செய்யும் திட்டடத்தினுள் புகையிரத ஊழியா்களில் 600 பேர் இந்தியாவுக்கு பயிற்சி பெறுவதற்கு அனுப்பப்படுவதுடன் அவ் ஊழியர்களில் 460 பேர் 2010ம் வருடம் முடிவுறும்போது இந்தியாவுக்கு அனுப்பி குறிப்பிட்ட பயிற்சி பெற்றுக்கொடுக்கப்பட்டது.

## 14 சர்வதேச புகையிரத தொடர்புகள்

கீழ் காணப்படும் சா்வதேச நிறுவகங்களுடன் முறியாத உறவுகள் பேணப்படுகின்றன

- SARC – (Trans Asia Railway)
- ESCAP – (Trans Asia Railway) ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளின் பொருளாதார ஒத்துளைப்புக்கான ஆணைக்குழு.
- UIC – உலக புகையிரத மாநாடு.
- ADB – ஆசிய அபிவிருத்தி வங்கி
- BIMSTEC ஆசிய நாடுகளின் புகையிரத ஒத்துளைப்புக்கான மாநாடு.

வலைய புகையிரத அபிவிருத்தி உதயமாகி சாா்க் மற்றும் பிம்ஸ்டின் வலயங்களில் பொது பிரயாண வலையமைப் பொன்றை கட்டியெழுப்புவதற்கான திட்டத்தில் இலங்கை புகையிரத சேவையில் செயற்றிறன் நிறைவேற்றப்பட்டது.

உள்ளூர் அரச புகையிரத சேவை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாகிய ஒப்பந்தங்கள் இரண்டிற்கு கைச்சாத்திடுவதற்கு அடித்தளமிடப்பட்டது

உலக புகையிரத சேவையில் அங்கத்தவராக வருடாந்தம் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளப்பட்டது.

புகையிரதத்தை அடிப்படையாக்கிக் கொண்டு கொள்கலண் வெளியொன்றை உருவாக்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடி ஏஹோபித்த முடிவொன்றிற்கு வித்திடப்பட்டது.

## 15 தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள்

- மஹிந்த சிந்தனையின் முற்போக்குகள் ஊடாக செயற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள திட்டங்கள்
  - கரையோரப் புகையிரதப் பாதையை பெலியத்த வரை நீடித்தல்.

    தரமதீப்பீட்டுச்சபையின் மூலம் கிடைக்கப் பெற்ற திட்டங்களின் தரமதிப்பீடு நிறைவடையும் நிலையிலுள்ளது.
  - வட புகையிரதப் பாதையை காங்கேசன்துறை வரை நீடித்தல்.

    இத்திட்டத்தின் மூலம் ஓமந்தையிலிருந்து பளை வரைக்கும் பளையிலிருந்து

காங்கேசன்துறை வரைக்கும் இரண்டு கட்டங்களின் கீழ் நிர்மாணப் பணிகளையும், வடபாதையில் சேவையில் ஈடுபடுத்த புதிய எஞ்சின்களையும் பொருட்கள் பெட்டிகளையும் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தாண்டிக்குழத்திலிருந்து ஓமந்தை வரையிலான நிர்மாணப் பணிகள் திணைக்களத்தினால் செய்யப்படுகிறது. ஓமந்தையிலிருந்து பளை வரைக்கும் பளையிருந்து காங்கேசன்துறை வரைக்கும் வெளிநாட்டு உதவியுடன் நிர்மாணப் பணிகளை செய்வதற்கு ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையிலான பாதையை நிர்மாணித்தல்

  இப்பாதையும் இரண்டு கட்டங்களின் கீழ் மதவாச்சியிலிருந்து மடுவரைக்கும் மடுவிலிரிந்து தலைமன்னார் வரைக்கும் பாதையை அமைக்க எதிர்பார்க்கப்படுகிறது.

- பிரதான புகையிரத நிலையங்கள் 25 நவீனமாக்குதல்

  பலவித முற்றங்களுடன் கூடிய கட்டடத் தொகுதியாக இந்தப் புகையிரத நிலையங்களை நவீனமாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- ஊள்ளுர் கொள்கலன் முற்றத்தை அமைத்தல்

  தனியார் துறையினரின் பங்களிப்புடன் கொள்கலன் சேவையை ஆரம்பிற்பதற்கு எதிர்பார்க்கபடுகிறது.

  ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் முன் ஏற்பாடுகளை செய்யவும் ஆலோசனைகள் பரிசீலிக்கப்படுகிறது.

- புகையிரத காணிகள் சொத்துக்களை அபிவிருத்தி செய்தல்

  மறுசீரமைப்புக்காக திட்டங்கள் தீட்டப்படுகிறது

- கொழும்பை அண்மித்த சேவையை மின்னியலாக்கல்

  எண்ணக்கரு அறிக்கையை சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது

- கொழும்பு நகரத்தினுள் மெற்றோ புகையிரத சேவையை ஏற்படுத்துதல்

  தொழில் நுட்ப அறிவு சம்பந்தமாக பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது

➢ கரையோர புகையிரத பாதையை நவீனப்படுத்துதல்

  - கொழும்பிலிருந்து மாத்தறை வரை புகையிரத பாதையை மீண்டும் அமைத்தல். புகையிரத ஓட்ட வேகத்தை மணிக்கு 100 கிலோ மீட்டர் வரை அதிகரிக்க வேண்டிய பாதைக் கட்டமைப்பை அமைத்தல். (தண்டவாளங்கள் ஸ்லீப்பர் கட்டை பெலஸ்ட்) இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.
  - அதிவேகத் தொடர்கள் 20 ஐயும் எஞ்சின்கள் 3 ஐயும் கொள்வனவு செய்தல்
  - இயந்திர மடுவங்கள் 3 ஐ புதிதாக அமைத்தல்
  - இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல்
  - மேலதிக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல்
  - புகையிரத பணியாட்கள் 600 நபர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்

➢ அதிவேக தொடர் ஊர்திகள் 13 ஐ இறக்குமதி செய்தல் (4 களனிவெளி பாதைக்கும் 7 பிரதான பாதைக்கும் 2 சுற்றுலா சேவைக்குமாக)

  கண்டி – கொழும்பு நகர் சேர் சேவையின் தரத்தை உயர்த்தல். களனிவெளி பாதையில் புகையிரத சேவையை விரிவாக்கல்

  இத்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்காகும்.

➢ எண்ணைத் தாங்கி வண்டிகள் 15 ஐ கொள்வனவு செய்தல்.

பேற்றோலியப் பொருட்களைக் கொண்டு செல்வதை அதிகரிப்பதே எதிர்பார்த்த இலக்காகும்.

- புதிய சமிக்கைக் கட்டமைப்பை அமைத்தல்.

  20 வருடம் பழைய, அடிக்கடி பழுதடையும் முறைக்குப் பதிலாக புதிய முறைகளை அமைத்தல்

- சபுகஸ்கந்த புகையிரதப் பாதை

  கொள்கலன் முற்றத்துக்காக புகையிரத வசதிகளை வழங்கல்

- மேலதிகமாக கொங்றீட் ஸ்லீபர் உற்பத்தி தொழிற்சாலையை அமைத்தல்






2010 -08-19 இந்திய கடன் திட்டத்தின் கீழ் இந்திய இர்கொன் நிறுவனத்தினால் கொழும்பு – மாத்தறை புகையிரதப்பாதை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.






வடபாதை மீள் நிர்மாண திட்டத்தின் கீழ் மதவாச்சி – தலைமன்னார் பாதை மீள் நிர்மாண செயற்றிட்டம் 2010-11-27 ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

## 16 புகையிரத சேவையின் முன்னேற்றத்திற்கு உள்ள தடைகளும் எல்லைகளும்

- நிருவாக சிக்கல்கள்
- ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள் வழங்குதலில் காணப்படும் எல்லைகள்
- தீர்மானம் மேற்கொள்வதில் முகாமைத்துவத்திற்கு உள்ள எல்லைகள்

  உதா : - ஒழுக்கம், தாபன வெற்றிடங்களை நிரப்பும்போது தோண்றும் எல்லைகள்.
- சொத்துகளை பராமரிப்பதற்காக உரிய முதலீடு கிடையாமை
- திணைக்கள சொத்துகள் வீழ்ச்சியடைதல்
- நிபுணத்துவ அறிவு பற்றாக்குறை
- புகையிரத காணிகளில் அத்துமீறி குடியேறல்